இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 09-05-2025

# தமிழ்நாட்டைப் பாராட்டுங்கள்!

நாளிதழ்களின் ஆசிரியர்கள், ஊடக நிறுவனங்களின் அதிபர்கள் சந்திப்பை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 6 ஆம் தேதியன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தினார்கள். தமிழ்நாட்டின் அனைத்து முன்னணி ஊடக, பத்திரிக்கையாளர்கள் இதில் கலந்து கொண்டார்கள். கடந்த நான்காண்டு காலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் நிகழ்த்திக் காட்டப்பட்ட திட்டங்கள், அதன் மூலமாக அடைந்த சாதனைகள் இக்கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

கோவிட் பெருந்தொற்று இரண்டாம் அலை இருந்த மிக மிக நெருக்கடியான சூழலில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. அனைத்து வகையிலும் மிகக் கடுமையான நெருக்கடி நேரத்தில், அனைத்துத் துறைகளும் அந்தப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் துறைகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாற்றப்பட்டது. இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்தி, மூன்றாம் அலை பரவாமல் தடுத்து, மிகப்பெரிய சாதனையைச் செய்து மக்களைக் காத்தார் முதலமைச்சர் அவர்கள்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் தரைமட்டத்துக்குப் போன நிர்வாகம் - எந்த ஒத்துழைப்பும் தராத ஒன்றிய அரசு; இவை இரண்டுக்கும் மத்தியில் ஆட்சியை நடத்தத் தொடங்கினார் முதலமைச்சர் அவர்கள். இத்தகைய சூழலில்தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ந்துள்ளது. ஏற்றுமதி வளர்ந்துள்ளது. வேலை வாய்ப்புகள் பெருகியுள்ளன. தொழில்கள் அதிகமாகி வருகிறது. அனைத்து உற்பத்தியும் அதிகமாகி இருக்கிறது. அனைத்து சமூகக் குறியீடுகளிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக ஆகி வருகிறது. சட்டம் ஒழுங்கு மிகச் சீராக இருப்பதும், உள்கட்டமைப்புகள் மிக நன்றாக இருப்பதும்தான் இதற்குக் காரணம்.

**2024 - 25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69 விழுக்காடு உண்மையான பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது. 10 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக, அதிக தொழிற்சாலைப் பணியாளர்கள் உள்ள மாநிலமாக, அதுவும் பெண் பணியாளர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. அதே நேரத்தில் தொழில் அமைதியும் பேணப்படுகிறது. தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதில் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து வருவதற்கு இதுதான் காரணம்.**

**நிதிப் பற்றாக்குறை திறம்படக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மாநில உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதம் குறையும் போக்கில் உள்ளது.**

மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, சிறந்த அரசு என்று நாம் மட்டும் சொல்லிக் கொள்ளவில்லை. ஒன்றிய அரசே சொல்கிறது. இவை அனைத்தையும் ஒன்றிய அரசு கொடுத்துள்ள விருதுகளே அங்கீகரித்துள்ளன.

விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசால் தமிழ்நாடு விருது பெற்றுள்ளது. சிறந்த நீர் மேலாண்மைக்காக தேசிய அளவில் மூன்றாம் இடம் என்ற விருதைப் பெற்றுள்ளது. மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் என்ற விருதைப் பெற்றுள்ளது. சுகாதாரத்திற்கான மதிப்பீட்டில் தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்கு குடியரசுத் தலைவர் விருது கிடைத்துள்ளது. தூய்மையைப் பராமரிப்பதில் சிறந்து விளங்கியதற்காக தேசிய அளவில் மூன்றாவது பரிசு கிடைத்துள்ளது. காசநோயை ஒழிக்க தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி - தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காகத் தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஐ.நா. விருதைப் பெற்றது. மாநில கூட்டுறவு வங்கியின் சிறந்த சேவைக்காக உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களே விருது வழங்கி இருக்கிறார்கள்.

ஒரு புதிய நகரம் வரப்போகிறது. உலகளாவிய விளையாட்டு நகரம் உருவாக்கப்பட உள்ளது. இராமேஸ்வரம், ஓசூரில் புதிய விமான நிலையங்கள் வர இருக்கின்றன. கும்பகோணத்தில் கலைஞர் பெயரால் பல்கலைக் கழகம் எழ இருக்கிறது. மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் தொடங்க இருக்கின்றன. கோவையில் நகைத் தொழில் பூங்காவும், ஓசூரில் அறிவுசார் பெருவழித் தடமும், ஒரகடம் - செய்யார் தொழில் வளர்த்தடமும் வர இருக்கின்றன. இவை அனைத்தும் காட்சிப்படுத்தப்படும் போது நாளிதழ் ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும் மலைத்துப் போனார்கள்.

“எங்களுக்கு இது ஐ ஒப்பனாக இருந்தது” என்றும், ‘இத்தனை சாதனைகள் செய்யப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு இதுவரை தெரியாது’ என்றும், ‘ஒத்துழைக்க மறுக்கும் ஒன்றிய அரசைச் சமாளித்து இவ்வளவு காலம் ஆட்சி நடத்தியதும், இத்தனை சாதனைகளைச் செய்ததும் மாபெரும் சாதனை தான்” என்றும் பத்திரிக்கையாளர்கள் மனமுவந்து அந்த அரங்கில் பாராட்டினார்கள். இவை அனைத்தும் அவர்களது பத்திரிக்கைகளில், ஊடகங்களில் எதிரொலிக்க வேண்டும் என்பதுதான் நமது விருப்பம் ஆகும்.

இந்தப் பத்திரிக்கையாளர் சந்திப்பில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனையே வேண்டுகோளாக வைத்தார்கள். “இந்தியாவுக்கே முன் மாதிரியான திட்டங்களைக் கொடுத்திருக்கிறோம். பல மாநில அரசுகள், இங்கு வந்து நமது திட்டங்களைப் பார்த்துச் சென்றுள்ளார்கள். இவை மிக நல்ல திட்டமாக இருந்தால் அதனை மனப்பூர்வமாக பாராட்டத் தயங்கக் கூடாது. விமர்சிப்பதில் அதிக ஆர்வம் காட்டும் சில ஊடகங்கள், ஒரு நல்ல திட்டத்தைப் பாராட்டி எழுதும் போது மிக மென்மையாகப் பாராட்டுவது ஏன் என்று தெரியவில்லை. பாராட்ட வேண்டியதை பாராட்டினால்தான், விமர்சிக்கும் போது அதற்கு உரிய மரியாதையும், மதிப்பும் கிடைக்கும். எனவே தயங்காமல் விமர்சிப்பதைப் போல தயங்காமல் பாராட்டுங்கள். தனிப்பட்ட என்னைப் பாராட்ட வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. தமிழ்நாட்டைப் பாராட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டார்கள்.

**தமிழ்நாடு வளர்ந்துள்ளது, உயர்ந்துள்ளது, மேன்மை அடைந்துள்ளது. எனவே, தயங்காமல் தமிழ்நாட்டைப் பாராட்டுங்கள்! பாராட்டுங்கள்!**



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன் வைத்தியநாதன் அவர்களின் புதல்வரும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், மயிலாடுதுறை நகரமன்ற உறுப்பினருமான சௌ. சர்வோதயன் – தாட்சாயிணி இணையரின் ஆண் குழந்தைக்கு “திராவிடன்” என்று பெயர் சூட்டினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் சௌமியன் வைத்தியநாதனின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் குறித்த பகுப்பாய்வு அறிக்கையை அளித்தார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் ஆகியோர் உள்ளனர்.

### தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளை காலம் வழங்கத்தான் போகிறது!

## பெற்றோர்கள் - பிள்ளைகளின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நல்ல நண்பனாகத் துணை நில்லுங்கள்!

### ‘பிளஸ் டூ’ முடிவுகள் வெளியான நிலையில் – முதல்வர் வேண்டுகோள்!

**சென்னை, மே. 9-**

**பிளஸ் டூ தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “பெற்றோர்கள் - பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணை நில்லுங்கள்!” என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Plus Two தேர்வு முடிவுகள் இன்னும் சற்று நேரத்தில் வெளியாகின்றன. Result எதுவானாலும் அதுவே முடிவல்ல என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர வேண்டும்.

தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளைக் காலம் வழங்கத்தான் போகிறது. இது உங்கள் வாழ்வின் தொடக்கம் மட்டுமே. இனிதான் உங்களின் சிறப்பான phase அமையவுள்ளது என்ற positive outlookஉடன் இந்தத் தேர்வு முடிவுகளை அணுகுங்கள்.

பெற்றோர்களும் பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணைநில்லுங்கள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் ஏவுகணைகளை நடுவானில் அழித்தொழித்தது இந்தியா!

### பாகிஸ்தான் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் காணொலி வெளியீடு!

*சண்டிகர், மே 9 -*

*பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸை குறி வைத்து பாகிஸ்தான் வீசிய ஏவுகணையை நடுவானில் இடைமறித்து இந்திய வான் பாதுகாப்பு அமைப்பு அழித்தொழித்துள்ளது. இந்திய எல்லையில் தொடர்ந்து அத்துமீறி வரும் பாகிஸ்தான், தற்போது பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸை நோக்கி ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.*

*இந்நிலையில், தயார் நிலையில் இருந்த இந்திய வான் பாதுகாப்பு அமைப்பு, பாகிஸ்தான் ஏவுகணைகளை அடுத்தடுத்து இடைமறித்து அழித்தொழித்தது. நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்ட இந்த ஏவுகணைகளின் பாகம் பஞ்சாப் மாநில எல்லையோரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*நேற்று அதிகாலை 1.10 முதல் 1.20 மணிக்குள் பஞ்சாப்பை குறிவைத்து பாகிஸ்தான் ஏவுகணைகளை வீசியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அமிர்தசரஸ் பகுதிக்குள் வருவதற்குள்ளாகவே பாகிஸ்தான் ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டதாக இந்திய வான் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.*

*சீனாவிடமிருந்து வாங்கிய ஏவுகணைகளை பஞ்சாப் மாநிலத்தை குறி வைத்து பாகிஸ்தான் ராணுவம் ஏவியதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய ராணுவத்தால் வீழ்த்தப்பட்ட ஏவுகணைகளின் பாகங்களில் சீன எழுத்துகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், பாகிஸ்தான் ஏவுகணைகளை இந்திய வான் பாதுகாப்பு அழித்தொழிக்கும் வீடியோவை ராணுவம் வெளியிட்டுள்ளது.*

**இந்திய ராணுவம் அதிரடி நடவடிக்கை!**

*பாகிஸ்தானில் 9 நகரங்களில் ட்ரோன்கள் மூலம் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் அந்நாட்டில் பதற்றம் அதிகரித்துள்ளது.*

*காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி சுற்றுலா பயணிகள் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில், இந்திய ராணுவம் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இரவோடு, இரவாக அந்நாட்டில் உள்ள தீவிரவாத நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி அழித்தது. இதனால் இருநாடுகளுக்கு இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.*

*இந்நிலையில், நேற்று பாகிஸ்தானின் கிழக்கு நகரமான லாகூரில் பல்வேறு இடங்களை குறிவைத்து குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.*




சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் நேற்று (08.05.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறை, அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் மார்ச் 2025ல் நடைபெற்ற 2024–2025ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வு முடிவுகளை வெளியிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை தேர்வுகள் இயக்கக இயக்குநர் திருமதி ந.லதா, இணை இயக்குநர்கள் இராமசாமி (மேல்நிலைப்பள்ளிகள்), திருமதி கே.பி.மகேஸ்வரி (பணியாளர்கள்) மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.